சிறந்த அறிவிப்புகளை வெளியிட்டுள்ள தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு பேரவையின் சார்பில் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

4. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த. . . (குறுக்கீடுகள்)*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள்.*

***திரு. மு.க. ஸ்டாலின்:** *ஈராயிரம் ஆண்டுகள் அன்னைத் தமிழகம் தவமிருந்து பெற்றெடுத்த தலைமகன்; சிங்க நடையும், சிங்காரத் தென்றல் நடையும், பொங்கு கடல் நடையும், புரட்சிக்கவி நடையும், தன்னுடைய உரைநடையால் கண்ட கோமான்! தம்பிமார் படைமீது விழியொற்றி வெற்றிகண்ட பூமான்! பூமிப் பந்தில் தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்களோ, அங்கெல்லாம், அவர்தம் இதயமெல்லாம் சிங்க சிம்மாசனம் போட்டு வீற்றிருக்கும் இதய மன்னன்! வங்கக் கடலோரத்தில் ஆறடிச் சந்தனப் பேழையில் உறங்கியும், உறங்காமலும் உறங்கிக் கொண்டிருக்கக்கூடிய பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்தநாளில் நான் என்னுடைய வாழ்த்துகளை, என்னுடைய நன்றியை, என்னுடைய வணக்கத்தை, அந்தக் கல்லறையை நோக்கிச் செலுத்துகிறேன்.*

2015 செப்டம்பர் 15] [திரு. மு.க. ஸ்டாலின்]

இப்பொழுது நான் தங்களிடம் கேட்கக்கூடிய ஒரு கோரிக்கை; பள்ளிக்கரணை காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்துச் சென்ற ஓர் இலங்கைத் தமிழர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுகுறித்தெல்லாம் அறிவிப்பு வந்திருக்கிறது. (குறுக்கீடுகள்) இருங்கள்; அதெல்லாம் ஆய்வில் இருக்கிறது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அதையெல்லாம் பேச முடியாது; ஆய்வில் இருப்பது குறித்து நீங்கள் பேசக் கூடாது. (குறுக்கீடுகள்) ஆய்விலே இருப்பதைப்பற்றி நீங்கள் பேச முடியாது. (குறுக்கீடுகள்) ஆய்விலே இருப்பதை நீங்கள் பேச முடியாது. (குறுக்கீடுகள்) டாக்டர் க. கிருஷ்ணசாமி, என்ன சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. மு.க. ஸ்டாலின், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். நீங்கள் சொல்லிவிட்டீர்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். நீங்கள் சொல்லிவிட்டீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) டாக்டர் க. கிருஷ்ணசாமி, என்ன? சொல்லுங்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு.க. ஸ்டாலின், உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தேன். நீங்கள் சொல்லிவிட்டீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அது ஆய்விலே இருக்கிறது. ஆய்வில் இருப்பது குறித்தெல்லாம் நீங்கள் கேட்கமுடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்பு வரும்போது அதை எடுத்துக்கொள்வேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்பு வரும்போது எடுப்பேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) டாக்டர் க. கிருஷ்ணசாமி, என்ன? சொல்லுங்கள்.

முற்பகல் 11-50

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அனுமதியில்லாமல் இப்படியெல்லாம் பேசக் கூடாது. (குறுக்கீடு) இப்படியெல்லாம் பேசுவது முறையல்ல. (குறுக்கீடு) நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. க. பாலகிருஷ்ணன், என்னவென்று சொல்லுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மற்றும் புதிய தமிழகம் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் அவையிலிருந்து வெளியேறினர்.)

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிட முடியாது என்று கர்நாடக அரசாங்கம் அறிவித்திருக்கிறது. எனவே, தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய பதட்டமான சூழ்நிலை குறித்து . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொன்னதை நான் பதிவு செய்துவிட்டேன். (குறுக்கீடு) இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அது எனது ஆய்வில் உள்ளது. பின்னர் எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக அரசு தமிழகத்திற்குக் கொடுக்க வேண்டிய தண்ணீரைக் கொடுக்க மறுப்பதாக பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுகுறித்து காலையில்தான் நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அது என் ஆய்வில் உள்ளது. அதைப் பின்னர் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் தீவிரமாக விவசாயம் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய நேரத்தில் காவேரியிலிருந்து தண்ணீர் இனிமேல் கொடுக்க முடியாது என்று கர்நாடக அரசு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று காலையில்தான் நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அது என் ஆய்வில் இருக்கிறது, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். அது என் ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) ஆய்வில் இருப்பதைப் பற்றியெல்லாம் பேச முடியாது.

2015 செப்டம்பர் 15] [பேரவைத் தலைவர்]

(குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, என்னவென்று சொல்லுங்கள்.

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழக சிறையில் இருக்கக்கூடிய ஆயுள் தண்டனைக் கைதிகளை கருணை அடிப்படையில் முன்கூட்டியே விடுதலை செய்ய வேண்டும் என்ற கவன ஈர்ப்புத் தீர்மானத்தினை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுகுறித்து நீங்கள் கவன ஈர்ப்பு முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அது என் ஆய்வில் இருக்கிறது. நீங்கள் சொன்னதை நான் பதிவு செய்துவிட்டேன். (குறுக்கீடு) அது எனது ஆய்வில் இருக்கிறது. பிறகு பார்த்துக்கொள்ளலாம். உட்காருங்கள்.

(மனிதநேய மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

5. கவன ஈர்ப்பு

ஸ்ரீவில்லிபுத்தூர், எஸ். கொடிக்குளம் மற்றும் எஸ். இராமச்சந்திராபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, எஸ். கொடிக்குளம் மற்றும் எஸ். இராமச்சந்திராபுரம் ஆகிய பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியததுவம் உர்ய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.